<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்</u>

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, **B.A, L.L.B.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு மார்ச் 23–ம் நாள் திங்கள்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 09–ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 472/2025</u>

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
அச்சிறுப்பாக்கம் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.155/2019 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

A1–சதிஷ், த/பெ.ராஜா,
மோகல்வாடி கிராமம், காட்டுக்கரணை அஞ்சல்,
மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

A2–பிரதாப், த/பெ.அழகேசன்,
மோகல்வாடி கிராமம், காட்டுக்கரணை அஞ்சல்,
மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

A3–சரவணன் த/பெ.முனுசாமி
மோகல்வாடி கிராமம், காட்டுக்கரணை அஞ்சல்,
மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

A4–தாமோதிரன் த/பெ.சாமியாடி
மோகல்வாடி கிராமம், காட்டுக்கரணை அஞ்சல்,
மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

........ எதிரிகள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 23.03.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 472/2025<br>TNCG15-002797-2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt, |

<table>
<tr><td></td><td></td><td>Sub Inspector of Police, Acharapakkam PS.<br>Complainant</td></tr>
<tr><td></td><td></td><td>A1–சதிஷ், த/பெ.ராஜா,<br>A2–பிரதாப், த/பெ.அழகேசன்,<br>A3–சரவணன் த/பெ.முனுசாமி<br>A4–தாமோதிரன் த/பெ.சாமியாடி<br>Accused</td></tr>
<tr><td>6.</td><td>Date of Occurrence</td><td>07.07.2019</td></tr>
<tr><td>7.</td><td>Date of Complaint</td><td>09.07.2019</td></tr>
<tr><td>8.</td><td>Date of Arrest if any and remand</td><td>Anticipatory Bail</td></tr>
<tr><td>9.</td><td>Period of Remand of the Accused</td><td>-----</td></tr>
<tr><td>10.</td><td>Date of release on bail</td><td>-----</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final Report</td><td>25.10.2019</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Sessions</td><td>-------</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha Sanhita</td><td>07.01.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the Witnesses</td><td><table>
<tr><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
<tr><td>PW3</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
<tr><td>PW4</td><td>10.03.2026</td><td>10.03.2026</td></tr>
<tr><td>PW5</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS</td><td>------</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.351 of BNSS Act</td><td>16.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>------</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>07.01.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>23.03.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>23.03.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>------</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>------</td></tr>
</table>

****

இவ்வழக்கானது 18.11.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 472/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 23.03.2026–ஆம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.R.சுந்தரமூர்த்தி, G.அருள்தேவகுமரன், A.R.லட்சுமிநாராயணன் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>**தீர்ப்புரை**</u>

**1.** இவ்வழக்கானது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 326 506(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

<u>**குற்றமுறையீட்டின் சுருக்கம்:**</u>

**2.** இவ்வழக்கில் கடந்த 07.07.2019 ஆம் தேதி மாலை சுமார் 03.00 மணியளவில் மோகல்வாடி கிராமம் மாரியம்மன் கோவில் தெருவில், அழகேசன் என்பவரின் வீட்டின் அருகே, சாட்சி–1 ரகு என்பவரின் தம்பி சாட்சி–2 விஜயகுமார் மேற்படி அழகேசன் என்பவரின் வீட்டின் வழியாக சென்று கொண்டிருந்தபோது 1 முதல் 4 வரையிலான எதிரிகள் சாட்சி–2 விஜயகுமார் என்பவரை வழிமடக்கி "ஓத்தா தெவிடியா பையா" என ஆபாசமாக பேசியுள்ளனர். மேற்படி சம்பவத்தை பார்த்து தடுக்க சாட்சி–3 சேகர் என்பவரை தடியால் தலையில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், சாட்சி–4 மஞ்சுளா என்பவரை காலால் எட்டி வயிற்றில் உதைத்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 1 முதல் 4 வரையிலான எதிரிகள் சாட்சி–2 விஜயகுமார் என்பவரை தடியால் வலது கால் மற்றும் வலது காதில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், சாட்சி–2 ஐ பார்த்து "கொல்லாமல் விட மாட்டேன்" என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, 1 முதல் 4 வரையிலான எதிரிகள் இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 326. 506(2) தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 18.11.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் முன்பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS–ன் கீழ் குற்றப்பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 326. 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**5.** அரசு தரப்பில், அ.சா.1 ரகு என்பவர் அவரது சாட்சியத்தில் தான் தற்போது மோகல்வாடியில் வசித்து வங்கியில் மேளாலராக வேலை செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் புகாரை நான்

கொடுக்கவில்லை என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள் என்றும், தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், கடந்த 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தனது தம்பி விஜயகுமார் என்பவர் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் அவரை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு தான் அழைத்து சென்றேன் என்றும், அவருக்கு கை, கால் மற்றும் காதில் காயம் ஏற்பட்டது. அவருக்கு சிகிச்சை முடித்து வீட்டிற்கு அழைத்து வந்தேன் என்றும், வழக்கு பற்றி தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும், போலிஸார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அரசு தரப்பில் இருந்து பிறழ்ந்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** கடந்த 2019 ம் வருடம் அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து உதவி ஆய்வாளர் திரு.ஆபிரகாம்அமலநாதன் என்பவரின் கையெழுத்து மற்றும் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும் என்றும், தற்போது அவர் பணியிட மாறுதல் ஆகி சென்றுவிட்டதால் ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து வரும், அ.சா.5 தியாகராஜன் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 09.07.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு ஆபிரகாம அமலநாதன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ரகு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 155/2019 இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(2)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுதாகர் மற்றும் சாந்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் அனைவரும் செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்னர் வழக்கில் காயம்பட்ட மஞ்சுளா, சேகர் மற்றும் விஜயகுமார் அகியோருக்கு விபத்து பதிவேட்டுடன்

கூடிய காயச்சான்று வழங்கிய மருத்துவர் சுகுமாரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கில் காயம்பட்ட விஜயகுமார் என்பவருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(2) இருந்து 341, 294(b), 323, 324, 326, 506(2) ஆக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள்341, 294(b), 323, 324, 326, 506(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் 351(1)(ஆ)BNSS–ன் கீழ் வினவிய போது எதிரி அதனை மறுத்து கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 326. 506(2)–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>**தீர்வு :–**</u>

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 326. 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின்

சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும்.

**10.** அ.சா.1 ரகு என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை அ.சா.ஆ.2 ஐ பரிசீலிக்கையில் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தன் தம்பி ராஜ்குமார் தங்கள் கிராமத்தை சேர்ந்த அழகேசன் மகள் அனிதா என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டதால் தங்கள் இரு குடும்பத்திற்கும், தகராறு ஏற்பட்டு விரோதம் இருந்து வந்த நிலையில் 07.07.2019 ஆம் தேதி பகல் சுமார் 3 மணி அளவில் சதீஷ்குமார், பிரதாப், சரவணன் மற்றும் அணில் என்கிற தாமோதரன் ஆகியோர் தடி எடுத்து வந்து அவ்வழியாக வந்த தனது தம்பி விஜயகுமார் என்பவரை அழகேசன் வீட்டின் அருகில் மடக்கி "ஓத்தா தெவிடியா பையா உன் அண்ணன் எங்கள் பெண்ணை கூட்டிக்கொண்டு சென்று விட்டான் நீங்க இதே ஊரில் சுற்றி சுற்றி வருகின்றீர்களா" என அசிங்கமாக பேசி தடியால் வலது கால் மற்றும் வலது காதில் அடித்து விட்டதாகவும் தன் தம்பி அலறி சத்தம்போடவே தனது அப்பா சேகர் மற்றும் தனது அம்மா மஞ்சுளா ஆகியோர் ஓடிப்போய் மடக்கிய போது மேற்கண்ட நபர்கள் தன் அப்பாவை தலையில் தடியால் அடித்துவிட்டார்கள் என்றும், தன் அம்மாவை வயிற்றில் எட்டி உதைத்து விட்டதாகவும், உடனே அங்கிருந்து வினோத்குமார் மற்றும் மேகலா ஆகியோர்கள் சண்டையை மடக்கி அனுப்பிய போது மேற்கண்ட நபர்கள் தன் தம்பி மற்றும் அப்பா அம்மாவை பார்த்து தடியை காட்டி "உங்களை கொலை செய்யாமல் விடமாட்டேன்" என மிரட்டி சென்றதாகவும், காயம்பட்ட மூவரும் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்று வருவதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆனால், அ.சா.1 அவரது நீதிமன்ற முதல் விசாரணயில் தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் புகாரை தான் கொடுக்கவில்லை என்று கூறியுள்ளார். இவ்வழக்கின் ஆணிவேரான புகாரையே அ.சா.1 மறுத்து சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி, அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் புகார் அ.சா.ஆ.2 ல் உள்ள சங்கதிகள் குறித்த நியாயமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது. அ.சா.1 ஐ அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு

அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதும் எவ்வித முரண்பாடும் வெளிகொணரபடவில்லை.

**11.** மேற்படி அ.சா.1 புகாரில் காயம்பட்ட மூவரும் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறியுள்ள நிலையில் அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றினை பரிசீலிக்கையில் மேற்படி விஜய் சேகர் மற்றும் மஞ்சுளா ஆகியோர் கடந்த 07.07.2019ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதும், அதில் சேகர் மற்றும் மஞ்சுளா ஆகியோருக்கு சொற்பகாயமும் விஜய் என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாக காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**12.** ஆனால், அ.சா.1 ரகு அவரது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகள் தனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், கடந்த 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தனது தம்பி விஜயகுமார் என்பவர் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் அவரை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு தான் அழைத்து சென்றதாகவும், அவருக்கு கை, கால் மற்றும் காதில் காயம் ஏற்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 விஜயகுமார், அ.சா.3 சேகர் மற்றும் அ.சா.4 மஞ்சுளா ஆகியோர் அவர்களது நீதிமன்ற சாட்சியத்தில் அ.சா.1ன் சாட்சியத்தினை ஒத்துரைத்து சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.2 விஜயகுமார் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் அவரை அ.சா.1 ரகு என்பவர் சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்று கூறி அரசு தரப்பில் இருந்து பிறழ்ந்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்களே தவிர, எதிரிகளின் குற்றச் செய்கைகள் குறித்தும், அவர்கள் தாக்கியதால் தான் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

**13.** மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தினை வைத்து பார்க்கும் பொழுது அ.சா.2 தான் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி மற்ற சாட்சிகளும் அ.சா.2 இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்திருப்பது அ.சா.2 க்கு ஏற்பட்ட கொடுங்காயம் உண்மையில் மேற்படி அவர் தானாக இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்டதா என்ற நியாயமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது. இந்நிலையில் மேற்படி அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 வரையிலான விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகளை பரிசீலிக்கையில் அ.சா.2 க்கு கொடுங்காயமும், அ.சா.3 மற்றும் அ.சா.4 க்கு சொற்பகாயங்கள் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வந்தாலும் கூட மேற்படி காயம் அரசு தரப்பில் கூறியுள்ளவாறு எதிரிகள் தாக்கியதால் தான் ஏற்பட்டதா என்ற நியாயமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது. எதிரிகள் சாட்சிகளை தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் சமரப்பிக்கப்படவில்லை என்பது மேற்படி சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

**14.** மேலும், இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.அபிரகாம்அமலநாதன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள உதவி ஆய்வாளர் அ.சா.5 தியாகராஜன் என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15.** மேலும், அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.**1** எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3) BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.233/2026–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில்

இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**16.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அனாவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** மேற்கண்ட முரண்பாடுகளால், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்களையும் ஒப்பிட்டு பரிசீலித்து பார்க்கும் போது, புகாரில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்து வலியுறுத்தி எதிரிகள் தான் அ.சா.2 ஐ வழிமறித்து பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் முன்னிலையில் அருவருக்கத்தக்க வகையில் எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளை மொழிந்ததாகவோ, ஆபத்தான ஆயுதங்களை கொண்டு அ.சா.2 க்கு கொடுங்காயம் ஏற்படுத்தியும் அ.சா.3 மற்றும் அ.சா.4 ஐ சொற்பகாயம் ஏற்படுத்தி அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 326, 506(2)–ன் கீழான கூறுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18.** எனவே முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் இதச பிரிவுகள்

341, 294(b), 323, 324, 326, 506(2)–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**19.** இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எனவே, அதுகுறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**20.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரி பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 18:08:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.

<u>அரசு தரப்புச் சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | ரகு, த/பெ.சேகர் |
| அ.சா.2 | விஜயகுமார், த/பெ. சேகர் |
| அ.சா.3 | சேகர் த/பெ.பெருமாள் |
| அ.சா.4 | மஞ்சுளா, க/பெ.சேகர் |
| அ.சா.5 | தியாகராஜன் த/பெ.முருகன் |

<u>அரசு தரப்புச் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் | அ.சா.1 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | புகார் மனு | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.8 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.9 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

அரசு தரப்புச் சான்றுப்பொருள் : இல்லை

எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை.

குறிப்பு:

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 18:08:18 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மதுராந்தகம்.**